| நம்மையும் நாட்டு மக்களையும் காப்போம் | தொற்றிலிருந்து தமிழகத்தை மீட்போம் |
|---|---|

செ.வெ.எண்:41 நாள்: 29.06.2021

***கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் வரப்பெற்ற மனுக்கள் தொடர்பான ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.***

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (28.06.2021) அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் மூலம் வரப்பெற்ற மனுக்கள் தொடர்பான ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்டந்தோறும் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பான மனுக்களைப் பெற்று, அம்மனுக்களின் மீது 100 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க **"உங்கள் தொகுதியில் முதலமைச்சர்"** என்ற திட்டத்தை செயல்படுத்த ஒரு புதிய துறையை உருவாக்கி இந்திய ஆட்சிப்பணி நிலையில் ஒரு சிறப்பு அலுவலர் மூலம் பொதுமக்களின் பிரச்சினைகள் நிறைவேற்றப்படும் என்று ஆணை பிறப்பித்தார்கள்.

அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகளின் சார்பில் 9,293 மனுக்கள் வரப்பெற்றுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 363 நபர்களுக்கு ரூ.5.68 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் வரப்பெற்ற 9,293 மனுக்களில் 8,321 மனுக்கள் இணையதளம் மூலமாக வரப்பெற்றுள்ளது. அதில், வருவாய்த்துறை மூலம் வரப்பெற்ற 5,843 மனுக்களில், 1,258 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1,582 மனுக்கள் நிராகரிக்கப்பட்டு 3,003 மனுக்கள் பரிசீலனையிலும், பிற துறைகள் மூலம் வரப்பெற்ற 2,478 மனுக்களில், 108 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு 221 மனுக்கள் நிராகரிக்கப்பட்டு 2,041 மனுக்கள் பரிசீலனை என மொத்தம் 8,321 மனுக்களில், 1,366 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1,811 மனுக்கள் நிராகரிக்கப்பட்டு 5,144 மனுக்கள் சம்மந்தப்பட்ட துறைகளில் பரிசீலனையில் உள்ளது.

மேலும், நிராகரிக்கப்பட்ட 1,811 மனுக்கள் மறு பரிசீலனைக்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு மீண்டும் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பொதுமக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் போர்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்கள் சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு தகுதியான மனுக்களுக்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரெ.சதீஸ், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்/பொறுப்பு அலுவலர் (உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம்) திருமதி செ.சாந்தி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திருமதி து.பாக்கியலட்சுமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் திரு.பி.பெரியசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.பி.முருகன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**

| | |
|---|---|
| **முககவசம் அணிவீர்** | **தனி மனித இடைவெளி கடைப்பிடிப்போம்** |